12th March 1966]

கனம் திரு. பூ. கக்கன் : சர்க்கார் செயல்பட்டுத்தான் வரு கிறது. இதிலே சில இடையூறுகள் வருகின்றன. ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதற்கு ஃபாரின் எக்சேஞ்ச் வேண்டியிருக்கிறது. ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் கிடைக்கும்போது அதைக் கொண்டு வெளிநாடுகளில் வாங்கவேண்டியிருக்கிறது. மேலும் உணவு உற்பத்தித் திட்டத் தின்கீழ் எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டு தான் இருக்கிறது.

புது ரக விதைகள்

* 260 **கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் உணவு உற்பத்தியை அதிகரிக் கும் பொருட்டு விவசாயிகளுக்குப் புதுரக விதைகளைக் கொடுப் பதற்கு உத்தேசம் உண்டா ?

(இ) ஆமென்றால், எந்தெந்த புதிய ரக விதைகள் கொடுக் கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) நெல் ரகம் ADT- -27.

வளர்ப்பு நெல் ரகம் 2701 (culture-2701)

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், இந்த ஆண்டு எத்தனை ஏக்கர் நிலத்திற்கு புதிய ரக விதைகள் கொடுக்கப்படும் ? இந்த விதைகள் யார் மூலமாகக் கொடுக்கப்படும் என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த ஆண்டு இரண்டு லட்சம் ஏக்கர் களுக்கு ஏ.டி.ட்டி. 27 குறுவை விதைகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாய இலாகா மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் புது ரக நல்ல விதைகள் கிடைக்கும் என்று சர்க்கார் விவசாயி களுக்குத் தெரியக் கூடிய முறையில் பிரசாரம் செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. கூட்டங்களில் சொல்லப்படுகிறது. பாம்ஃப்லெட்ஸ் வாயிலாகவும் விவசாய மக்களுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

திரு. கோ. சி. மணி : இந்த ஏ.டி.ட்டி. 27 விதையானது குறிப் பாக ஆடுதுறைப் பண்ணையிலிருந்து சேகரிக்கப்பட்ட விதை எவ்வளவு என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆடுதுறை மட்டும் என்பது அல்ல.

Nearly 5,000 tons of seed have been obtained from the State Seed Farms and nearly half of this quantity has already been distributed to the Thanjavur district. அதனாலே தஞ்சாவூர் ஜில்லா விலே தான் ஏ.டி.ட்டி. 27 போடுகிறோம். (அதற்காக விதைகளை சர்க்கார் விவசாயப் பண்ணைகளிலிருந்து கொடுக்கிறோம் . . . .

[12th March 1966

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் ஆடுதுறையிலிருந்து எவ்வளவு விதைகள் சேகரிக்கப்பட்டன என்று கேட்கிறார். அந்த இன்ஃபர்மேஷன் இருந்தால் சொல்லுங்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : ஆடுதுறை மட்டுமல்ல. கிராம விவசாயிகளிடமிருந்தும் வாங்கியிருக்கிறோம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, குறுகிய காலத்தில் நல்ல பலன் அளிக்கும் விதை வேண்டியது தான். ஆனால் அதே நேரத்தில் உற்பத்தி ஆகும் நெல்லை மக்கள் விரும்பி உண்ணும் நிலை இருக்கிறதா ? இப்போது உற்பத்திச் செய்யப் பட்டிருக்கும் நெல் அந்த அளவுக்குத் தரம் உள்ளது தானா ?

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சை மக்கள் வாங்கி 60 மூட்டை நெல் அதிகமாக எடுப்பதால் இது லாபகரமாக இருக்கிறது.

திரு. மா. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, ஏ.டி.ட்டி. 27 மூன்று மாதங்களில் சாகுபடி செய்யக் கூடியது. ஆறு மாதங்களில் சாகுபடி செய்யக் கூடிய சம்பா விதை கண்டுபிடிக்கப்பட்டிருக் கிறதா ? அதன் பெயர் என்ன ? எப்போது வழங்கப்படும்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே சம்பா விதை ஸி.ஓ. 25 ஆராய்ச்சி செய்யப்பட்டது. அது இப்போது விவசாய மக்களுக் குப் பெரிதும் பயன்படுகிறது. அந்த மாதிரி வேறு விதைகளைக் கண்டுபிடிக்க அரசாங்கம் மேலும் பரிசிலனை செய்துகொண்டிருக் கிறது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்த ஏ.டி.ட்டி. 27 நெல்லைப் போடும்போது அதிக உரமிட்டால்தான் விளைகிறது என்று பரிட்சார்த்தமாகத் தெரிந்து விட்டது. ஏ.டி.ட்டி. விதை வாங்குகிறவர்களுக்கு அதற்குத் தேவையான அளவுக்கு உரம் காலத்தில் கிடைக்கவில்லை. ஆகவே, விதையைக் கொடுக்கும் போதே அதற்குத் தேவையான உரத்தையும் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இந்த விதைக்கு உரம் கொஞ்சம் கூடுத லாகத்தான் தேவைப்படுகிறது. கூடுதலாக உரம் போட்டால் கூடுதலாகப் பலன் கிடைக்கிறது. ஏ.டி.ட்டி. விதை வாங்குகிறவர் களுக்குத்தான் உரம் கொடுக்கவேண்டும் என்று சொல்ல முடியாது. மற்றவர்களுக்கும் உரம் வேண்டியிருக்கிறது. விதை கொடுக்கும்போதே சேர்த்துக் கொடுக்க முடியும் என்று சொல்லு வதற்கில்லை.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, ஏ.டி.ட்டி. 27 விதைகளை எந்தெந்த ஸீஸனில் போடுவது என்று யாருக்கும் சரியாகத் தெரியவில்லை. அதிகாரி களுக்கே அது புரியவில்லையே; அதைப் பற்றி கனம் அமைச்சருக்கு ரிப்போர்ட் இருக்கிறதா ? எந்தெந்த ஸீஸனில் போடலாம் என்று சொல்லுவார்களா ?

12th March 1966]

கனம் திரு. பூ. கக்கன் : குறுவை ஸீஸனில்தான் போடவேண்டு மென்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகளுக்குத் தெரியாமல் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, it is a fact that there is confusion in the Agriculture Department with regard to the sowing of the seed, ADT-27. They say that it has to be sown during the Sambha season in the Thanjavur district and some other season in other districts. So, may I have a clarification in respect of this matter from the Hon. Minister?

(பதில் இல்லை.)

திரு. மா. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, தஞ்சையிலே இருக்கிற ஜாயின்ட் டைரக்டர் அவர்கள் புதிதாக இந்த ஆண்டு வழங்கப்போகிற 2,00,000 எக்கர் நிலத்திற்குப் பிரத்தியேகமாக உரத் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய, வேண்டிய உரத்திற்கு அரசாங்கத்திடம் கேட்டிருப்பதாகவும், நிச்சயம் கிடைக்கும் என்றும் கூறியிருக்கிறார். அது போன்று வழிவகை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : நான் ஏற்கனவே இந்த மன்றத்தி லேயே சொன்னேன். 5,000 டன் விதை அரசாங்கப் பண்ணையி லிருந்து கிடைத்திருக்கிறது. அதைத் தவிர இதர கிராம விவசாயி களிடமிருந்து. . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் உரத்தைப் பற்றிக் கேட்கிறார். 5,000 எக்கருக்கு காரண்டி செய்திருக்கிறீர்களா என்று கேட்கிறார்.

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு தூரம் உதவி செய்ய முடியுமோ அதைச் செய்யலாமே தவிர, காரண்டி கொடுப்பதற் கில்லை.

திருத்துறைப்பூண்டியில் வெடி விபத்து

*261 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் வெடி மருந்து தயாரிக்கும் தொழிற்பட்டரையில் அண்மையில் வெடி விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் என்ன ?

(உ) அதனால் உயிர் இழந்தவர்கள் எத்தனைபேர் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) The District Revenue Officer, Thanjavur who conducted the enquiry under section 9 (1) of the Indian Explosives Act, 1884 has reported that the exact cause of the explosion could not be ascertained but that the accident may have been due to careless handling of the explosive substance.

(c) Five persons.